இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 307 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 03 – செவ்வாய்க்கிழமை 17 ஜீன் 2025 – வெளியூர் 16 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 307 : Thiruvalluvar Year - 2056 - Aani 03 - Tuesday 17 June 2025 - Dak 16 + 12 Pages ₹ 5.00


## மக்களின் குறைகளைத் தீர்க்க 10 ஆயிரம் இடங்களில்

# ஜீலை 15 - முதல் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்கள்!

## தஞ்சை அரசு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.6.2025) தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 325 கோடியே 96 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் 2461 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 309 கோடியே 48 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 4127 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், எஸ்.எஸ். சிவசங்கர், கோவி. செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, கல்யாண சுந்தரம், எஸ். முரசொலி, செல்வி ஆர். சுதா, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், க. அன்பழகன், டி.கே.ஜி. நீலமேகம், கே. அண்ணாதுரை, என். அசோக்குமார், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர் திருமதி அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம், தாட்கோ தலைவர் நா. இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தஞ்சை, ஜீன் 17-**

**“மக்களின் குறைகளைத் தீர்க்க தமிழ்நாடு முழுவதும் 10ஆயிரம் இடங்களில் ஜீலை 15 - முதல் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்கள் நடைபெறும்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சையில் நடைபெற்ற அரசு விழாவில் உரையாற்றும் போது அறிவித்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று(16.6.2025) தஞ்சாவூரில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி, ஆற்றிய உரை வருமாறு:-

தஞ்சை அரசு விழாவில் பங்கேற்று உங்களை சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மாமன்னர் இராசராசன் ஆட்சி செய்த இந்த சோழ நாட்டின் காற்றை சுவாசிக்கும்போதே ஒரு கம்பீரம் பிறக்கிறது!

மாடு கட்டி போர் அடித்தால் மாளாது என்று யானை கட்டி போர் அடித்த, நெற்களஞ்சியமான தஞ்சை மண்ணிற்கு வந்திருக்கிறேன். இங்கு வருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னால் மேட்டூர் அணையை குறித்த தேதியில் திறந்து வைத்துவிட்டு, நேற்று மாமன்னன் கரிகாலன் கட்டிய கல்லணையையும் திறந்திருக்கிறேன்! இப்படி, மேட்டூர் அணையையும், கல்லணையையும் குறித்த நேரத்தில் நேரில் வந்து திறந்து வைக்கும் முதலமைச்சர் நான் தான் என்று, முதல் முதலமைச்சராக பெருமைப்படுகிறேன். இதை இங்கு இருக்கக் கூடிய உழவர் பெருமக்களெல்லாம் மகிழ்ச்சியோடு சொன்னார்கள்... அவர்களின் மகிழ்ச்சியை அதிகரிக்க, முக்கியமான அறிவிப்பை இங்கு வெளியிட விரும்புகிறேன்...

**2021-22ஆம் ஆண்டு முதல் டெல்டா மாவட்டங்களுக்கு குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம், 276 கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கடந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோலவே இந்த ஆண்டும் டெல்டா மாவட்டங்களுக்காக குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்திற்கு 82 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்!**

### குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம்!

அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டு வரலாற்றிலேயே முதன்முறையாக, டெல்டா அல்லாத மற்ற மாவட்டங்களில் நெற்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளும் பயன் பெறும் வகையில் 132 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கார் குறுவை சொர்ணவாரி பருவத்திற்கான சிறப்புத் தொகுப்புத் திட்டத்தையும் உழவர் பெருமக்களின் நலனுக்காக துவங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும், சுமார் 56 ஆயிரம் விவசாயிகளுக்கு குறுவை சிறப்புத் தொகுப்பு வழங்கப்படுகிறது. இதுபோல் தமிழ்நாட்டில் 36 மாவட்டங்களில் இருக்கும் சுமார் 8 இலட்சம் விவசாயிகளுக்கும் இந்த சிறப்புத் தொகுப்புத் திட்டம் வழங்கப்படும்!

இந்த எழுச்சிமிகு விழாவை ஏற்பாடு செய்திருக்கும் அருமைச் சகோதரர் அமைச்சர் கோவி.செழியன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உயர்கல்வித்துறை அமைச்சராக அவர் பொறுப்பேற்ற பிறகு, அவரால் நடத்தப்படும் ஃபர்ஸ்ட் மாவட்ட அரசு நிகழ்ச்சி இது! ஃபர்ஸ்ட்ஆக இருந்தாலும் இந்த நிகழ்ச்சியை பெஸ்ட்ஆக ஏற்பாடு செய்திருக்கிறார்!

நம்முடைய கோவி.செழியன் அவர்களை பற்றி சொல்லவேண்டும் என்றால், சட்டக் கல்லூரி மாணவராக கழக மேடைகளில் தன்னுடைய பயணத்தை தொடங்கி, தன்னுடைய உழைப்பால் கொள்கைப் பற்றால், தொண்டாற்றும் உள்ளத்தால் உழைத்து இன்றைக்கு, அமைச்சராக உயர்ந்து நிற்கிறார்! அவர் இன்னும் சிறப்படைய என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்!

அதேபோல், மாவட்ட ஆட்சியர் திருமதி பிரியங்கா பங்கஜம் ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகள்! கஷ்டப்பட்டு படித்து முன்னேறி, இன்று சிறப்பாக செயல்படும் மாவட்ட ஆட்சியர்களில் ஒருவராக தன்னுடைய பெயருக்கு பின்னால், தன் அம்மாவின் பெயரை சேர்த்து, அவரையும் பெருமைப்படுத்துபவராக இருக்கிறார்! மாவட்ட ஆட்சியருக்கும் அவருக்கு துணை நிற்கும் மாவட்ட அரசு அலுவலர்களுக்கும் எனது பாராட்டுகள்! வாழ்த்துகள்!

### தஞ்சையையும், கலைஞரையும் பிரித்து பார்க்க முடியாது!

நேற்று, தஞ்சையில் பழைய பேருந்து நிலையத்தின் அருகில், தலைவர் கலைஞரின் சிலையைத் திறந்து வைத்தேன்! ஏன் என்றால், தஞ்சையையும் தலைவர் கலைஞரையும் பிரித்து பார்க்க முடியாது! ஒருங்கிணைந்த தஞ்சையின் மண்ணின் மைந்தன் அவர்! காவிரி வளர்த்த தமிழினத் தலைவர் அவர்! மாமன்னர் இராசராசனுக்கு சிலை அமைத்தவர் அவர்! பெரியகோயிலின் ஆயிரமாண்டு விழாவை நடத்தியவர் அவர்! பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தது முதல், இறுதியில் காவேரி மருத்துவமனையில் உயிர் பிரியும்வரை காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமைக்காக குரல் கொடுத்தவர்! போராடியவர்! பிரதமர் வி.பி. சிங் மூலம், காவிரி நடுவர் மன்றமும் காவிரி ஆணையமும் அமையக் காரணமானவர்! இடைக்காலத் தீர்ப்பை பெற்றுத் தந்தவர்! இறுதித் தீர்ப்பையும் பெற்றவர்!

பெருமையோடு சொல்கிறேன்... காவிரியில், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டியது தலைவர் கலைஞர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகமும்தான்! அந்த வரிசையில்தான், தலைவர் கலைஞரின் தலைமைத் தொண்டனான நானும், டெல்டா காரன் என்ற உணர்வோடு இன்றைக்கு இங்கு வந்திருக்கிறேன்!

இந்த நிகழ்ச்சியில், 325 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பிலான இரண்டாயிரத்து 461 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 309 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நாலாயிரத்து 127 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன்! அது மட்டுமல்ல. இரண்டு இலட்சத்து 25 ஆயிரத்து 383 பேருக்கு 558 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை இந்த விழாவில் வழங்கயிருக்கிறேன்!

### ரூ.1000 கோடிக்கு மேலான திட்டங்கள்! உதவிகள்!

கிட்டதட்ட, ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலான திட்டங்கள் உதவிகள் இந்த விழாவின் மூலமாக நடைபெறயிருக்கிறது. இந்த நேரத்தில், காவிரியால் செழிக்கும் இந்த தஞ்சை மாவட்டத்திற்கு, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் செய்யப்பட்டிருக்கும் திட்டங்களில் முக்கியமான சிலவற்றை மட்டும் நான் சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன்.

- **ஒரத்தநாடு வட்டம், பஞ்சநதிக் கோட்டை கிராமத்தில் நாள் ஒன்றுக்கு ஐந்தாயிரம் மூட்டை நெல் கொள்முதல் செய்யும் அதிதிறன் கொண்ட மெகா நேரடிக் கொள்முதல் நிலையத்தை அறிவித்தோம். இப்போது அது செயல்பாட்டில் இருக்கிறது. ஒரு கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவியிருக்கிறோம்!**
- **அதேபோல், 2022இல் அறிவிக்கப்பட்டு, 2024இல் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பார்க்கை தஞ்சாவூரில் திறந்து வைத்திருக்கிறேன்!**
- **பேராவூரணி வட்டத்தில் MSME நிறுவனங்களுக்காக ஏழு கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொது வசதியாக்கல் மையம் திறந்திருக்கிறோம்!**
- **கும்பகோணம் - மன்னார்குடி சாலை பணிகள் 99 விழுக்காடு முடிந்திருக்கிறது!**
- **கும்பகோணம் சீர்காழி சாலை பணிகளும் 98 விழுக்காடு முடிந்திருக்கிறது!**
- **இதன் தொடர்ச்சியாக நடந்து கொண்டு இருக்கும் பணிகளை சொல்ல வேண்டும் என்றால், நீங்கள் பாடுபட்டு விளைவிக்கும் ஒரு நெல்மணி கூட வீணாகக்கூடாது என்று, ஒரத்தநாடு வட்டம் நடுவூரில், 170 கோடி ரூபாய் மதிப்பில் 54 ஏக்கர் பரப்பளவில், ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய சேமிப்புக் கிடங்கு அமையவிருக்கிறது!**
- **பூதலூர் வட்டம், செங்கிப்பட்டி, பாளையப்பட்டி தெற்கு கிராமத்தில் 256 ஏக்கர் பரப்பளவிலும் பட்டுக்கோட்டை வட்டம், ராஜாமடம் கிராமத்தில் 113 ஏக்கர் பரப்பளவிலும் சிப்காட் தொழிற்பேட்டை அமைய இருக்கிறது!**
- **பட்டுக்கோட்டை வட்டம் மனோரா கிராமத்தில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ‘பன்னாட்டு கடற்பசு பாதுகாப்பு மையம்’ அமைக்கப்பட இருக்கிறது!**
- **53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ‘அதிநவீன பால் பதப்படுத்தும் நிலையம்’ அமைக்கப்பட இருக்கிறது!**
- **திருவையாறு புறவழிச்சாலை பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு தயார் நிலையில் இருக்கிறது!**
- **பட்டுக்கோட்டை வட்டம் ஏரிப்புறக் கரை, கீழத்தோட்டம் மீனவ கிராமங்களுக்கு 32 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்கு தளம், தடுப்புச் சுவர் அமைக்கும் பணியை தொடங்க இருக்கிறோம்.**
- **பட்டுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம் இருபது கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு விரைவில் பயன்பாட்டுக்கு வர இருக்கிறது.**
- **பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளில் அதிகம் வாழும் சீர்மரபினர் குடும்பங்களைக் கண்டறிந்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சீர்மரபினர் வாரியத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு, அதன்மூலம் இதுவரை பதினோராயிரம் குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகள் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது!**

இப்படி தஞ்சை மண்ணில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நம்முடைய திராவிட மாடல் அரசின் திட்டங்கள் சென்று சேரும் தெம்போடுதான் இவ்வளவு வேகமாக நாங்கள் இத்தனை திட்டங்களை செய்கிறோம்! 2021இல் நான் முதலமைச்சரான பிறகு, டிசம்பர் மாதம் தஞ்சை பகுதிக்கு நான்


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## அமைச்சர் கோவி. செழியனுக்கு பாராட்டு!



**இந்த எழுச்சிமிகு விழாவை ஏற்பாடு செய்திருக்கும் அருமைச் சகோதரர் அமைச்சர் கோவி. செழியன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உயர்கல்வித் துறை அமைச்சராக அவர் பொறுப்பேற்ற பிறகு, அவரால் நடத்தப்படும் ஃபர்ஸ்ட் மாவட்ட அரசு நிகழ்ச்சி இது! ஃபர்ஸ்ட்ஆக இருந்தாலும் இந்த நிகழ்ச்சியை பெஸ்ட்ஆக ஏற்பாடு செய்திருக்கிறார்!**

**நம்முடைய கோவி.செழியன் அவர்களை பற்றி சொல்லவேண்டும் என்றால், சட்டக் கல்லூரி மாணவராக கழக மேடைகளில் தன்னுடைய பயணத்தை தொடங்கி, தன்னுடைய உழைப்பால் கொள்கைப் பற்றால், தொண்டாற்றும் உள்ளத்தால் உழைத்து இன்றைக்கு, அமைச்சராக உயர்ந்து நிற்கிறார்! அவர் இன்னும் சிறப்படைய என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்!**

# கலைஞர் பல்கலைக்கழக மசோதாவுக்கு ஒப்புதல் வழங்காத ஆளுநர் !